V. பாபு

7

இயக்குநர்(பொ), மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. K. செந்தில்வேல், B.E.,

செ.மு.ஆ.எண்.அ2 / 10433 / 2017-5 நாள் : 19.02.2020

பொருள் : பணியமைப்பு - மோட்டார் வாகன பராமரிப்புத் துறை - இயக்குநரகம், சென்னை - திரு. V. பாபு, இளநிலை உதவியாளர் - அடிப்படை பணியிலிருந்து பணிமாற்றம் மூலம் இளநிலை உதவியாளராக முறையாக பதவி உயர்வு வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் அன்னாரது பணிக்காலத்தை முறைப்படுத்தி ஆணைகள் வழங்கல்.

பார்வை : இயக்குநரது செ.மு.ஆணை எண். அ2/ 10433/ 2017 நாள் 19.03.2018

------

பார்வையில் காணும் இயக்குநரது செயல்முறைகள் வாயிலாக அடிப்படை பணியிலிருந்து பணிமாற்றம் மூலம் திரு. V. பாபு, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு இத்துறையின் சென்னை, இயக்குநரகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிய ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அன்னார் சென்னை, இயக்குநரகத்தில் 20.03.2018 பிற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

திரு. V. பாபு, இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணிக்காலம் இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 20.03.2018 பிற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டாண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-) கொ. செந்தில்வேல்
இயக்குநர்(பொ)

பெறுநர்

திரு. V. பாபு, இளநிலை உதவியாளர், இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை-42

நகல்

ஊ4 இருக்கையாளர் / ஊ பிரிவு கண்காணிப்பாளர், இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை-42
துணை இயக்குநர்(நி)(பொ), இயக்குநரகம், மோ.வா.ப.துறை, சென்னை-42
அ2 இ.கோப்பு

/ஆணைப்படி/

துணை இயக்குநர்(நி)(பொ)

19/2/2020